**SC.No.153/2022**

**நாள்..** 04.01.2023.

**அ.சா.9–** சங்கர்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் யார் என்றும் இறந்துபோன நபர் யார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் யாரையும் எங்கும் வைத்தும் நான் பார்த்ததில்லை என்றும் அவர்கள் இதற்கு முன்பாக அவர்கள் யார், அவர்களது பெயர் என்ன என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளான பனையடியானை ஆஜர் எதிரிகள் கட்டை, கம்பு, அருவாளை வைத்து தாக்கினார்கள் என்ற விசயத்தை என்னை போலிசார் விசாரித்தபோது சொல்லவில்லை என்றாலும் போலிசார் சொல்லித்தான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ரவி யார் என்பது எனக்கு தெரியாது என்றும் அவர் எனக்கு எதுவும் போன் செய்யவும் இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன விசயத்தையும் போலிசார் சொல்லித்தான் முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றும் தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**SC.No.153/2022**

**நாள்..** 04.01.2023.

**அ.சா.7–** பன்னீர் செல்வம்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் வீட்டிற்கும் அண்ணாசிலைக்கும் இடையே சுமார் 2 முதல் 2 1/2 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். பனையடியான் வீட்டிற்கும் அண்ணாசிலைக்கும் இடையே சுமார் 3 முதல் 3 1/2 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். பனையடியான் இறந்து மருத்துவமனையில் இருக்கும்போது தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது நான் சொன்னதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். ஒரு நபரை 3 நபர்கள் அண்ணாசிலை அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் தாக்கிக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். மேலும் போலிசார் விசாரணையில் கீழே கிடந்த நபர் யார் அவரை யார் தாக்கினார்கள் என்ற விசயத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இறந்துபோன நபர் எனது மைத்துனர் என்றால் சரிதான். நான் என் தங்கை சுமதி, கபிலன், எல்லோரும் பனையடியான் வீட்டில் இருக்கும்போது தான் போன் மூலமாக தகவல் வந்ததை கேட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். என் மைத்துனர் மீது பல வழக்குகள் மற்றும் கொலை வழக்குகள் இருக்கிறது என்றால் சரிதான். என் மைத்துனர் மீது யார் யார் விரோதம் வைத்திருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்த என் மைத்துனருக்கும் எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்பது எதுவும் எனக்கு தெரியாது என்றும் யாரும் என்னிடம் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரிதான். எதிரிகள் யார்

என்ன பெயர், எந்த ஊர் என்று எதுவும் தெரியாது என்றும் அவர்களுடன் எனக்கு நேரடியாக எந்த பழக்கமும் இல்லை என்று சொன்னால் சரிதான். அவர்களை நான் எப்போதும், எங்கு வைத்தும் பார்த்ததில்லை என்று சொன்னால் சரிதான். 05.03.2021ம் தேதி மாலை 05.00 மணிக்கு நான் எங்கும் செல்லவில்லை என்றால் சரிதான். எந்த சம்பவத்தையும் நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகள் ஒரு நபரை அடித்ததை பார்த்ததையும் பின்னர் அவர்கள் ஒரு ஆட்டோவில் ஏறி சென்றுவிட்டார்கள் என்ற விசயத்தை போலிசார் சொல்லித்தான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேலும் முதல் விசாரணையில் என் மைத்துனர் பனையடியான் இறந்துபோன விசயத்தை சொன்னார்கள் என்றும் அதன் பின்பு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும் அங்கு 1ம் எதிரிக்கும் பனையடியானுக்கும் ஆட்டோ வாங்குவதில் முன்விரோதம் இருந்ததாகவும் நான் சொல்லியுள்ள சங்கதிகள் போலிசார் சொல்லிக்கொடுத்து சொன்னேன் என்றால் சரிதான்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றும் தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**SC.No.153/2022**

**நாள்.. 04.01.2023.**

**அ.சா.4–** கபிலன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனது சித்தப்பா ரவி என்பவர் 2 1/2 மாதத்திற்கு முன்பு தூக்குப்போட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் கீழக்கரை பாலிடெக்னிக்கில் படித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது வீட்டிலிருந்து 2 பேருந்துகள் மாறித்தான் கல்லூரிக்கு செல்கிறேன் என்றால் சரிதான். வீட்டிலிருந்து கல்லூரிக்கு செல்ல குறைந்தபட்சம் 1 முதல் 1 1/2 மணிநேரம் ஆகும் என்றால் சரிதான். என் தந்தை பனையடியான் மீது பெருமாள் என்பவரை வெட்டியதாக சொல்லி வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா இந்த சம்பவத்திற்கு பின்பு நாகர்கோவிலில் தான் இருந்து வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். எனது அப்பா நாகர்கோவிலில் இருந்தபோது அவரது முதலாளியின் வைப்பாட்டியை கொலை செய்துவிட்டதாக சொல்லி முதலாளியின் மீதும் என் தந்தை மீதும் வழக்கு ஒன்று இன்றுவரை நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். என் அப்பாவிற்கு நிரந்தரமான வேலை கிடையாது என்றால் சரிதான். என் தந்தை இராமநாதபுரத்தில் உள்ள கோபி என்ற பைனான்ஸ் கம்பெனியில் பணம் வசூல் செய்யும் வேலை பார்த்தார் என்றால் சரிதான். அது அடியாள் வேலையை செய்யக்கூடிய வேலை என்றால் சரிதான். என் அப்பா மதுஅருந்துவார் என்றால் சரிதான். என் தந்தையார் மீது பல வழக்குகளும், பல எதிரிகளும் இருந்தார்கள் என்பதால் உயிருக்கு பயந்து வீட்டிலேயே இருப்பார் என்று சொன்னால் சரிதான். 05.03.2021ம் தேதி அன்று நான் கல்லூரிக்கு சென்றுவிட்டேன். நான் படிக்கும் கல்லூரி காலை 09.30 மணிக்கு ஆரம்பித்து மாலை 05.00 மணிக்குத்தான் முடியும் என்றால் சரிதான். அன்றைய தினம் கல்லூரி முடித்துவிட்டு மாலை 05.00 மணிக்கு கீழக்கரையிலிருந்து புறப்பட்டு வீட்டிற்கு வந்தேன் என்று சொன்னால் சரிதான். எனது சித்தப்பா ரவி எங்கு, என்ன வேலை செய்கிறார் என்பது எனக்கு தெரியாது. எனக்கும் என் அம்மாவுக்கும் தனித்தனியாக செல்போன் உண்டு என்றால் சரிதான். எனது சித்தப்பா ரவிக்கு என்ன

செல்போன் வைத்திருக்கிறார் என்பதும் அதன் எண் என்ன என்பதும் எனக்கு தெரியாது. அன்றைய தினம் நான் கல்லூரியை முடித்துவிட்டு நேராக வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு வீட்டிற்கு வரும்போது மாலை 06.00 அல்லது 06.30 மணி இருக்கும் என்றால் சரிதான். அப்போது எனது வீட்டில் எனது சித்தப்பா ரவி, என் மாமா பன்னீர் செல்வம், என் தாயார் சுமதி ஆகியோர்கள் வீட்டில் இருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது தான் என் அப்பா காயத்துடன் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருக்கிறார் என்ற செய்தி என் சித்தப்பா ரவிக்கு போன் வந்தது. ராஜேஸ் எனது அப்பாவின் நண்பர் ஆவார். அவ்வாறு போன் வந்தவுடன் நாங்கள் அனைவரும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது தந்தை காயத்துடன் பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். அதற்கு பின்பு தான் என் தந்தையின் நண்பர் ராஜேஸிக்கு போன் செய்து வரச்செய்தோம். அவர் வரும் போது இரவு 07.00, 07.30 மணி இருக்கும். இராஜேஸ் வந்தவுடன் அவர் என்ன நடந்தது என்று கேட்டு தெரிந்துகொண்டார். அப்போது அவரிடமும் என் தந்தையார் காயப்பட்டு மருத்துவமனையில் காயம்பட்டு இருந்தார் என்ற செய்தியை கேட்டுதான் வந்தோம் என்ற செய்தியை அவரிடம் சொன்னோம். நாங்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு போலிசார் இருந்தார்கள். அப்போது போலிசார் தான் 3 நபர்கள் என் தந்தையாரை தாக்கிவிட்டதாக சொன்னார்கள். அப்போது தான் இந்த விஷயங்களை பற்றி எங்களுக்கு தெரியும். என் அப்பாவிற்கும் எதிரிகளுக்கும் விரோதம் இருந்ததா என்பது எனக்கு நேரில் எதுவும் தெரியாது. என் பெற்றோரும் இது குறித்து என்னிடம் சொன்னதில்லை. ஆஜர் எதிரிகள் யார் அவர்கள் பெயர் என்ன என்பது பற்றி எதுவும் தெரியாது. அவர்களை நான் எப்போதும் பார்த்தது இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன எனக்கு தெரிந்த விசயங்களை தான் போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி எந்த விசயத்தையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் என் தந்தையை 3 எதிரிகளும் என் தந்தையை ஆயுதங்களை வைத்து தாக்கினார்கள் என்ற விசயத்தை போலிசார் சொல்லித்தான் நான் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். என் தந்தையை தாக்கியதாக சொல்லும் இடத்திற்கு நான் செல்லவும் இல்லை என்றும் எதையும் பார்க்கவும் இல்லை என்றும் சொன்னால் சரிதான். புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றும் யார்

எழுதியது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் ஆயுதங்களை அடையாளம் காட்டியது போலிசார் சொல்லிக்கொடுத்து அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றும் தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.